அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அ.எண் :130/2017
தேதி 07.11.2017

**இலங்கையின் ஒப்பற்ற தலைவர்**
**திரு சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின்**
**பெயர் மீண்டும் சூட்டவேண்டும்.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் வேண்டுகோள்.**

இலங்கையின் ஒப்பற்ற தலைவர் என்று பல்வேறு நாடுகளின் தலைவர்களால் பாராட்டப்பெற்ற, திரு சௌமியமூர்த்தி தொண்டமான் பெயர் சூட்டப்பட்டிருந்த அரசு நிறுவனங்களில் அவர் பெயரை நீக்கியது வருந்தத்தக்கது, மீண்டும் அந்த நிறுவனங்களுக்கு அவரின் பெயரை இட வேண்டும்.

1947 ஆம் ஆண்டு இலங்கையின் பாராளுமன்றத்தில் திரு தொண்டமான் தலைமையில் ஏழு இந்தியத்தமிழ் வம்சாவளியை சார்ந்தவர்கள் உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டப் பின்னர், 1948 இல் மலையகத்தமிழர்களின் வாக்குறுதி பறிக்கப்பட்டபின் ஏறத்தாழ 40 வருட தொடர் போராட்டத்திற்குப்பிறகு திரு சௌமியமூர்த்தி தொண்டைமான் அவர்களின் முயற்சியால் 1988 நவம்பர் 9 ஆம் தேதி நிறைவேற்றப்பட்ட விசேஷ சட்டத்தால் இந்திய வம்சாவளியினருக்கு பிரஜா உரிமை வழங்கப்பட்டது. அவருடைய சீரிய முயற்சியும், அரசியலில் அவருடைய தலைமை பண்பும் அநேக தலைவர்களால் பாராட்டப்பட்டது அனைவரும் அறிந்ததே.

நலிவுற்ற தமிழர்களின் வாழ்வாதாரம் மேம்பட தொழிற்பயிற்சி திட்டங்களையும், சுயதொழில் வாய்ப்புகளையும், பல்கலைகழக கலாச்சார படிப்பு நிதிஉதவி திட்டங்கள் என பல்வேறு வகை வாழ்வாதார திட்டங்களுக்கு அடிகோலியது திரு தொண்டமான் அவர்களின் திறமையும் அவரின் போராட்டங்களும் என்றால் அது மிகையாகாது.

இவரது தொண்டினை போற்றும் வகையில் இந்த துறைகள் குறித்த அரசு நிறுவனங்களுக்கு அவரது பெயர் சூட்டப்பட்டிருந்தது. ஆனால் இன்று இவரது பெயரை நீக்கிவிட்டு வேறு பெயர்களை சூட்டியிருப்பது தமிழ் சமுதாயத்தை அவமதித்தது போலாகும்.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

திரு தொண்டமானின் தொண்டு வரலாறு, இன, மொழி வேறுபாடு இன்றி பல நூறு ஆண்டுகளுக்கு இலங்கை தமிழர் மட்டுமல்லாமல் உலகு வாழ் தமிழ்மக்களால் போற்றப்படுகிறது.

அவர் மறைந்து 20 வருடங்களுக்குள் அவரது பெயரை நீக்குவது மிகச் சிறந்த வரலாற்று பதிப்பை மறைப்பது, நாகரீகத்திற்கு புறம்பான செயலாகும்.

மக்களின் நினைவில் மிகச் சிறந்த தலைவர்களின் பெயர்களும் அவர்தம் சேவைகளும் நீண்ட காலத்திற்கு இருக்கவேண்டும், அவர்களை போல தன்னலம் போற்றி வாழ்வதற்கு உந்தப்பட வேண்டும் என்ற காரணத்தினால் தான் பல இடங்களுக்கும், சாலைகளுக்கும், நிறுவனங்களுக்கும் தலைவர்கள் பெயர்கள் சூட்டப்படுகின்றன. தற்போது நடந்திருக்கும் இந்த பெயர்மாற்றம் வரலாற்றில் தமிழரின் பங்கினை அவர்தம் மாண்பினை குறைக்கும் விதத்திலும் மறைக்கும் விதத்திலும் செய்யப்படும் ஒரு செயலாகவே தோன்றுகிறது.

உலகில் எந்த மூலையிலும் உள்ள தமிழரை குறிவைத்து அவருக்கு எதிராக நடத்தப்படும் ஒவ்வொரு நிகழ்விற்கும் தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் போராட முன்வரவேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்படுவதாக உணர்கிறேன்.

திரு தொண்டமான் பெயரை மீண்டும் அந்த நிறுவனங்களுக்கு சூட்டிட இலங்கை அதிபருக்கும் அரசிற்கும் அனைத்து தமிழ் தலைவர்களும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்



**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com